**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோத்தகிரி</u>**

**<u>O.S.No. 33/2020</u>**

**2025 –ம் வருடம் அக்டோபர் திங்கள் 08ம் நாள் புதன்கிழமை வாதி சாட்சி PW1 ஆக நிலை 3 பெஞ்ச் கிளர்க் திருமதி. M. திலகவதி என்பவரால் சத்தியபிரமாணம் செய்து விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.**

**பெயர் : சகுந்தலா** **தாலுக்கா : கோத்தகிரி**

**க/பெ : மாதன்** **வயது : 56**

**கிராமம் : கொட்டநள்ளி** **தொழில் : இல்லத்தரசி**

---

**<u>வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.</u>**

**<u>PW1 சாட்சி மனுவின் பேரில் வாதியின் தரப்பில் அழைக்கப்பட்டு மறுவிசாரணை 11.55 A.M.</u>**

1. நான் இவ்வழக்கின் வாதியாவேன். என்னிடம் காட்டப்படும் 17.11.2006 தேதியிட்ட கிரையப் பத்திரம் ஜி.ஜே. மாதன், ராமன் என்பவருக்கு 45 சென்ட் கிரையமாக எழுதிக்கொடுத்தாகும். இந்த கிரைய பத்திரம் வாதியின் தரப்பில் வா.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணத்தை கவனக்குறைவாக நான் வழக்கு தாக்கல் செய்யும்போது குறிப்பிடவில்லை.

**குறுக்கு விசாரணை**

**1.** 2ம் பிரதிவாதி ஜி.ஜே. மாதன் என்பவர் என் அண்ணன் என்றால் சரிதான். 17.01.2006 ல் எனது அண்ணன் ஜி.ஜே. மாதன் மேலே குறிப்பிட்ட ஆவணத்தின்படி எனது சித்தப்பா ஜி.எல். ராமன் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எங்களுக்குள் பாகப்பிரிவினை நடந்ததால்

தான் எனது சித்தப்பா மேற்படி தேதியில் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். கிரையப் பத்திரம் வா.த.சா.3 ல் ஜி.எல்.ஜோகி கவுடர் என்பவருக்கு பிதுராஜிய வகையில் சொத்துக்கள் பாத்தியப்பட்டதும் மேற்படியான தன் காலம் வரைக்கும் ஆண்டு அனுபவித்து வந்தும் மேற்படி காலம் சென்ற பிறகு, மேற்படியாரின் வாரிசுகளாகிய எனக்கும் எனது சகோதரர் ஜி.ஜே.ரவி மற்றும் எனது சகோதரிகளுக்கும் சேர்த்து பாத்தியப்பட்டதும் இவ்வகையில் எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை நமது குல ஆச்சாரப்படி, பஞ்சாயத்தாரர்கள் முன்பு பாகம் பிரித்துக் கொண்டதில் எனக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அது தவறாகும். எங்களுக்குள் பாகப் பிரிவினை ஏற்படவில்லை.

2. மேற்படி சொத்தை பின்னிட்டு ஜி.எல்.ராமன் மீண்டும் என் அண்ணன் ஜி.ஜே. மாதனுக்கு கிரையம் கொடுத்த விபரம் எனக்கு தெரியும்.

**Sd/- G. Amirdham, 08.10.2025**
**District Munsif,**
**Kotagiri.**